# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 262/மா/2025
நாள் 13 .03.2026

J. சண்முகசுந்தரம்,
பவானி . --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. சண்முகசுந்தரம் என்பவரின் 15.07.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று பெறப்பட்டு 262/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், பவானி, நியூ வார்டு எண் 19, காவேரி தெரு, கதவு எண் 236 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. சண்முகசுந்தரம் என்பவர் தனது 15.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"COMPLAINT FILED UNDER SECTION 3 & 7(C) OF THE TAMIL NADU LOCAL BODIES OMBUDSMAN ACT 2014

1) That the complainant (J. Shanmuga sundaram) is a law abiding and peace loving citizen residing since day one of his birth as given above address.
2) That M/s The Commissioner, Erode City Municipal Corporation at Brough Road, Erode-638 001 against whom the complaint is made.
3) My Father Expired on 29.07.2023 at Erode, Government Head Quarter Hospital, admitted as IP 83047/AE-Ward on the same day without informing me since he under treatment for many decade at SRC Hospital.
4) For making Correction in my Father Death Certificate Bearing No. D-2023:33-16001-000789 issued by Registrar (Birth & Death), Government Head Quarter Hospital, Erode (even after my objection via registered letter on 31.07.2023) against FORM-2 signed by KANCHANA without any Proof for deceased name & his age which is Unlawful & conspiracy as per the rules,. If Death Occurs in Hospital it

is their responsibilities to file FORM-2 as Informant than others & whether its IP Records & Forms are Authentic?

5) The matter was taken to District Registrar (Birth & Death) who is none other Erode District Collector, vide O.MU.22047/2023/L1 DT 04.12.2023, as I was directed to approach Tashildhar (Rev), Bhavani Tk for necessary action, after 11 months of Delay, he directed me vide O.MU:5732/2024/A3 DT 29.11.2024 to approach further Competent Authority @ Erode Jurisdiction.

6) On 17.12.2024, My application for the correction/cancellation of entries in my Father Death Certificate with annexure via registered letter sent, as it was obtained by fraudulently with false information & No Proof's submitted for which no actions/communications & not even acknowledged my application which was made (as per the Judgement given by Honourable High Court of Madras vide WP (MD) No.8319 of 2024 dt 24.04.2018) & also didn't sent the seniority No. of the my application in their files nor saying whether my application was accepted/rejected in stipulated time.

7) As Death Cert. (No.789) was issued (mentioning) under section 12/17 of Registration of Birth & Death Act 1969 & also Rule 8/13 of Tamilnadu Registration of Birth and Death Rules, 2000 and its correction/cancellation also to be done as per same act. My claim is supported by Madras High Court's Judgement vide W.P. (MD) No.8319 of 2024 dt. 24.04.2018 For Section 15).

8) Hence, it is due to the wilful negligence or dereliction of duty of the Commissioner, Erode Municipal Corporation as a Public Servant with a Ulterior motive as many applications for correction were done by the City Health Officer, Erode Municipal Corporation Daily under the same section for which my application was applied. So my requested to the Honourable Tamil Nadu Local Bodies Ombudsman for pass necessary order as deem fit under 12 (C) & (D) of Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 and also to order him to consider my application and pass necessary order to the City Health Officer, Erode Municipal Corporation for Correction/Cancellation of entries in my Father Death Certificate as per application made, which as per High Court of Madras Judgement as above, as its says that only the Commissioner in respective Corporation Limits of Tamil Nnadu are Competent Authority for doing Correction/Cancellation of Entries for Applications made under Sec. 15 of Registration of Birth & Death Act, 1969."

**2.** மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ **01.08.2025** நாளிட்ட அறிவிப்பு மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

**3.** இந்நிலையில், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை பிறப்பு/இறப்பு பதிவாளர் தன்னுடைய **03.09.2025** நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"மனுதாரர் மனுவில் திரு. J. சண்முகசுந்தரம் என்பவர் தன் தந்தை ஜெயபாலன் (பதிவு எண் D–2023:33–16001–000789) இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயர் மாற்றம்

செய்யுமாறு விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரரின் தந்தை ஜெயபாலன் என்பவர் 29.07.2023 அன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துள்ளார்.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை மற்றும் தலைமை பிறப்பு இறப்பு பதிவாளரின் வழிகாட்டுதல் R.NO.3612995/ SBH1-1/S1/2022 Dated 18.02.2023 படி இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பின் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயரை நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் திருத்தம் செய்ய வழிகாட்டுதல் வழங்கியுள்ளார்கள் என்ற தகவலை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 5210/2025/எச்3 நாள் 28.1.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

''மனுதாரர் புகார் தொடர்பாக 29.07.2023 நதேதியன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் காலமான திரு.ஜெயபாலன் அவர்களின் இறப்பினை, பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 திருத்தியமைக்கப்பட்ட பிறப்பு இறப்பு பதிவு சட்டம். 2003 பிரிவு 8(1) (b)-ன்படி, மருத்துவமனையின் பணி மருத்துவ அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட இறப்பு அறிக்கை (Form 2)–ல் உள்ள தகவல்களின்படி திரு.ஜெயபாலன் என்பவரின் இறப்பினை, மாவட்ட அரசு மருத்துவமனையின் பிறப்பு இறப்பு பதிவாளரால் (பொது சுகாதாரத் துறையின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர்) பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு எண். D-2023:33-16001-000789).

இறப்பு அறிக்கை (Form 2)ல் இறந்தவரின் மனைவி பெயர் காஞ்சனா என குறிப்பிட்டுள்ளதன்படி அன்னாரின் இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் தனது தந்தை திரு.ஜெயபாலன் இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் மாற்றம் செய்து தரக்கோரியுள்ளார். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மற்றும் தலைமை பிறப்பு இறப்பு பதிவாளரின் வழி காட்டுதல் கடிதம் எண்.3612995/SBHI-1/S1/2022, dated 18.02.2023ல் இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பின் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இறப்பு சான்றிதழில் மனைவின் பெயரை நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் திருத்தம் செய்ய வழிகாட்டுதல் வழங்கியுள்ளார்கள் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆனால் மனுதாரர் தன்னுடைய 31.01.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

I, J. Shanmuga sundaram, s/o Late K.T. Jayabalan peace loving and law abiding citizen (aged 50 years) residing from day one of my birth at Door No.236, Cauvery Street, New Ward No.19, Bhavani-638 301 hereby submit my application for adjournment of hearing on 03.02.2026 due to the following reason as,

1. That I am suffering from mild bronchitis with dry cough, unhold my bladder.

2. As TNLBO, Chennai is a Quasi Judicial and its main objective is to know the truth of the matter. Hence I request you to kindly included the below mentioned as the opposite parties else my petition will be dismissed as Non-Jointer of necessary parties.

    1) Dy. Director, Dept. of Public Health cum Dist Assistant registrar of Birth and Death, Thindal, Erode 638 012.

    2) The Resident Medical Officer (RMO), Govt. Head Quarter Hospital, GH Premise, Erode 638 009.

   Because Now I came to know that PIN (Patient Identification Number) 555100-90644010 for FORM-4 with MCCD belongs to Female of 40 yrs of age whose name is vijayalakshmi as per computer records of GHQH, Erode which was mentioned for my father Form-4 for the registration of death certification Reg. No.D-2023:33-16001-000789 on 01.08.2024.

3. After my complaint to TNLBO on 15.07.2025 Erode Municipal Corporation Commissioner vide a letter to Dy.Director, DPH, Thindal, Erode-638 012 vide 5210/2025 /H3 dt. 21.08.2025 against an enquiry conducted at GHQH, Erode premise and again asking me to submit 2 sets of Legal documents of all deceased & handed to Mrs. Suganthi, DPH & Mr. Sathiskumar Registrar on 21.08.2025 and applied for correction through crs portal which has to approved by Sanitary Inspector, Erode Municipal Corporation, Zone-3, Surampatti, Erode as still no reply from them.

    1) REGISTRAR (BIRTH/DEATH), GHQH, ERODE LETTER 09.08.2023 FOR MY OBJECTION LETTER A/C.

    2) FIRST APPELLATE AUTHORITY, GHQH, ERODE DT. 13.08.2025 WITH ATTESTED COPIES WITH IT.

    3) MY AND OP SLIP REG. AT ERODE GHQH WITH ONLY NAME, AGE AND SEX AS ITS DETAILS.

Hence I request to TN Local Bodies Ombudsman kindly look into the matter and do the needful to adjourn for some other date in March 2026 end and also to add above mentioned as parties to bring justice to my father suspicious/mysterious death along with correction/cancellation of Entries in the Death Certificate as above under law."

7. எதிர்மனுதாரர் தரப்பில் ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

> மனுதாரர் புகார் தொடர்பாக 29.07.2023 ந்தேதியன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் காலமான திரு.ஜெயபாலன் அவர்களின் இறப்பினை, பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 திருத்தியமைக்கப்பட்ட பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 2003 பிரிவு 8(1) (b)-ன்படி, மருத்துவமனையின் பணி மருத்துவ அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட இறப்பு அறிக்கை (Form 2) உள்ள தகவல்களின்படி திரு.ஜெயபாலன் என்பவரின் இறப்பினை, மாவட்ட அரசு மருத்துவமனையின் பிறப்பு இறப்பு பதிவாளரால் (பொது சுகாதாரத்துறையின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர்) அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு எண். D-2023:33-16001-000789).

இறப்பு அறிக்கை (Form 2)ல் இறந்தவரின் மனைவி பெயர் காஞ்சனா என குறிப்பிட்டுள்ளதன்படி அன்னாரின் இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் தனது தந்தை திரு.ஜெயபாலன் இறப்பு சான்றிதழில் மனைவி காஞ்சனா பெயரை நீக்கம் செய்து தரக்கோரியுள்ளார். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மற்றும் தலைமை பிறப்பு இறப்பு பதிவாளரின் வழி காட்டுதல் கடிதம் எண்.3612995/SBHI-1/S1/2022, dated 18.02.2023ல் இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பின் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயரை நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் திருத்தம் செய்ய வழிகாட்டுதல் வழங்கியுள்ளார்கள் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனு, மின்னஞ்சல் கடிதம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அரசு தலைமை மருத்துவமனை, ஈரோடு–ன் பிறப்பு இறப்பு பதிவாளரின் கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரரின் தகப்பனார் K.T. ஜெயபாலன் என்பவர் ஈரோடு தலைமை மருத்துவமனையில் இறந்து விட்ட நிலையில், அவரின் இறப்பு சான்றிதழ் எண் D-2023:33-16001-000789ல் பிழைத் திருத்தம் செய்யுமாறு ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு மனு அளித்தும், இதுவரை பிழைதிருத்தம் செய்யவில்லை என்பதால் தன் தகப்பனாரின் இறப்பு சான்றிதழில் பிழை திருத்தம் செய்து வழங்கிட ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்க கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக 29.07.2023ந்தேதியன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் காலமான திரு.ஜெயபாலன் என்பவரின் இறப்பினை, பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 திருத்தியமைக்கப்பட்ட பிறப்பு இறப்பு பதிவு சட்டம், 2023–ன்படி மருத்துவமனையின் பணி மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட இறப்பு அறிக்கை (Form 2) உள்ள தகவல்களின்படி மாவட்ட அரசு மருத்துவமனையின் பிறப்பு இறப்பு பதிவாளரால் (பொது சுகாதாரத்துறையின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர்) பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், இறப்பு அறிக்கை (Form 2)ல் இறந்தவரின் மனைவி பெயர் காஞ்சனா என குறிப்பிட்டுள்ளதன்படி அன்னாரின் இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் மனுவில் தனது தந்தை திரு.ஜெயபாலன் இறப்பு சான்றிதழில் மனைவி காஞ்சனா பெயரை நீக்கம் செய்து தரக்கோரியுள்ள நிலையில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மற்றும் தலைமை பிறப்பு இறப்பு பதிவாளரின் கடிதம் எண்.3612995/SBHI-1/S1/2022, dated 18.02.2023–ல் இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பின் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயரை நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் திருத்தம் செய்ய வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது என்பதும் ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது. இதனையே, பிறப்பு இறப்பு பதிவாளர், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை என்பவரின் கடிதத்தில் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகார் தொடர்பாக 29.07.2023 ந்தேதியன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் காலமான திரு.ஜெயபாலன் என்பவரின் இறப்பினை, பிறப்பு இறப்பு பதிவு சட்டம், 1969–ன்படி, மருத்துவமனையின் பணி மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட இறப்பு அறிக்கை (Form 2) உள்ள தகவல்களின்படி மாவட்ட அரசு மருத்துவமனையின் பிறப்பு இறப்பு பதிவாளரால் (பொது சுகாதாரத்துறையின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர்) பதிவு செய்யப்பட்டுள்ளது. இறப்பு அறிக்கையில் (Form 2)ல் இறந்தவரின் மனைவி பெயர் காஞ்சனா என குறிப்பிட்டுள்ளதன்படி அன்னாரின் இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் காஞ்சனா என பதிவு

செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் தனது தந்தை திரு.ஜெயபாலன் இறப்பு சான்றிதழில் மனைவி பெயரான காஞ்சனா என்பதை நீக்கம் செய்து தரக்கோரியுள்ளது குறித்து, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் மற்றும் தலைமை பிறப்பு இறப்பு பதிவாளர், தமிழ்நாடு–ன் கடிதம் எண்.3612995/SBHI-1/S1/2022, நாள் 18.02.2023–ல் இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பின் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயரை நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் திருத்தம் செய்ய வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளதால் மனுதாரர் மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி நிவாரணம் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தலாம் என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. J. சண்முகசுந்தரம்,
கதவு எண் 236, காவேரி தெரு,
நியூ வார்டு எண் 19,
பவானி–638 301,
ஈரோடு மாவட்டம்.

(2) ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/3/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032